FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

CrNo 213026

1. District : திண்டுக்கல் PS: ஊ.த.க.பிரிவு Year: 2025 FIR No.: 14/2025 Date: 05.12.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 29.10.2025 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 04.12.2025 at 11.00 hrs

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.12.2025 Time : 07.30 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : கிணனி தட்டச்சு புகார்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கன்னிவாடி மலை தெற்கு திசை நோக்கி
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அலுவலகம், அதிகாரி சரகம்

Beat Number : (b) Address : திண்டுக்கல் மாவட்டம், சுமார் 20 கி.மீ
முறைக் காவல் எண் முகவரி தென்மேற்கு திசையில்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: தே.P. இனையதாகர் (b) Father's/ Husband's Name : பழனிச்சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 45/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் (g) Address : கே. எண். 14-1-22, வேலுப்பிள்ளை தெரு,
தொழில் முகவரி - அய்யம்பாளையம், அதிகாரி சரகம், - திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தி. முருகன், சரகம் நோக்கி அலுவலர், கன்னிவாடி மலை தெற்கு திசை அதிகாரி சரகம், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Illumy 5-12-25

U. Ulaganathan 05/12/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.12.2025 at 10.15 hrs

Name: பெயர் U. பழனிச்சாமி,
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு முகமை,
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:14/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 05.12.2025-ம் தேதி காலை சுமார் 07.30 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல், ஆத்தூர் தாலுகா, அய்யம்பாளையம், வேலுபிள்ளை தெரு, கதவு எண்.14-1-22-ல் வசிக்கும் திரு.P.இளையராஜா, த/பெ. திரு.பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 08.00 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். திரு.P.இளையராஜா, வயது 45/2025, த/பெ.பழனிச்சாமி, கதவு எண்.14-1-22, வேலுபிள்ளை தெரு, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல், பெறுநர். உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகின்றேன். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, கன்னிவாடி மலை தெற்கு கிராமத்தில் சர்வே எண்.636/7, 636/8, 636/1ல் அடங்கிய சுமார் 6.59 ஏக்கர் புஞ்சை நிலத்தை சேலத்தைச் சேர்ந்த மணிவேலு என்பவரிடம் கடந்த 15.10.2025 அன்று வாங்கினேன். அது தொடர்பாக விற்பனை ஆவணமானது ஆத்தூர் சார்பதிவக ஆவண எண்.2135/2025 மற்றும் 2136/2025 நாள்.15.10.2025ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி நிலத்திற்கு பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பமானது ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து விண்ணப்ப எண்.2025/0103/13/411373 ஆனது வருவாய்துறைக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் கடந்த 29.10.2025 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு கன்னிவாடிமலை தெற்கு கிராம VAO அலுவலகத்திற்கு நானும் என்னுடைய நண்பர் திரு.ஜெயக்குமார் அவர்களும் சென்று அங்கு பணியில் இருந்த VAO திரு.முருகன் அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் தொடர்பாக கேட்டோம். அதற்கு VAO திரு.முருகன் அவர்கள் பட்டா மாறுதல் மனுவை பரிசீலித்து பரிந்துரை செய்ய வேண்டும் என்றால் ரூ.5,000/- லஞ்சமாக கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். கொடுத்தால் தான் மனுவை அனுப்ப முடியும் என்று கூறினார். பணம் இல்லாததால் நாங்களும் வந்துவிட்டோம். அதன் பின்பு 03.11.2025 காலை சுமார் 11.00 மணிக்கு கன்னிவாடிமலை தெற்கு கிராம VAO

அலுவலகத்திற்கு நானும் எனது நண்பர் ஜெயக்குமாரும் சென்று அங்கிருந்த VAO திரு.முருகன் அவர்களை சந்தித்து பட்டா தொடர்பாக கேட்டோம். அதற்கு VAO திரு.முருகன் அவர்கள் மனுவை பரிசீலித்து DT அவர்களுக்கு அனுப்பி விட்டதாகவும், DT அவர்களிடம் தகவல் கேட்டு சொல்கிறேன் என்றும் தெரிவித்தார். ஆனால் அவர் எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை. அதன் பின்பு கடந்த 10.11.2025 அன்று எனது பட்டா மாறுதல் விண்ணப்பமானது மூலப்பத்திர நகல் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்து ரிஜெக்ட் செய்யப்பட்டதாக எனது கைபேசிக்கு குறுஞ்செய்தி வந்தது. அதனால் பட்டா மாறுதல் வேண்டி மறுபடியும் இணையம் வழியாக 22.11.2025 அன்று இரண்டு ஆன்லைன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தேன். அதன் விபரம் விண்ணப்ப எண். 2025/0103/13/417508 மற்றும் விண்ணப்ப எண்2025/0103/13/417511 ஆகும். அதன் பின்பு 26.11.2025 அன்று காலை சுமார் 08.54 மணிக்கு VAO திரு.முருகன் அவர்கள் 8940007050 என்ற கைபேசி எண்ணிலிருந்து என்னுடைய கைபேசி எண் 7810015900 என்ற எண்ணிற்கு அழைத்து பேசினார். அப்போது VAO திரு.முருகன் அவர்கள் ஏன் ஆன்லைனில் மறுபடியும் விண்ணப்பம் செய்தீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே விண்ணப்பமானது ரிஜெக்ட் செய்யப்பட்டுவிட்டதால் திரும்ப விண்ணப்பம் செய்ததாக கூறினேன். அதற்கு அவர் என்னிடம் கேட்டுவிட்டு செய்திருக்கலாமே என்று கூறிவிட்டு வைத்துவிட்டார். பின்னர் 02.12.2025 அன்று காலை சுமார் 09.10, 09.11 மற்றும் 09.17 மணிக்கு மிஸ்டு கால் கொடுத்திருந்தார். அதனை நான் கவனிக்கவில்லை. அதனால் திரும்ப சுமார் 09.17 மணிக்கு எனது கைபேசி எண்ணில் இருந்து அழைத்தேன். ஆனால் அவர் எடுக்கவில்லை. பின்னர் 03.12.2025 காலை சுமார் 09.37 மணிக்கு VAO திரு.முருகன் அவர்கள் எனக்கு கைபேசியில் அழைத்து ஏன் அலுவலகம் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் இரண்டொருநாளில் வருவதாக கூறினேன். இந்நிலையில் 04.12.2025 காலை சுமார் 11.00 நானும் எனது நண்பர் திரு.ஜெயக்குமார் அவர்களும் கன்னிவாடிமலை தெற்கு கிராம VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.முருகன் அவர்களை சந்தித்து பட்டா தொடர்பாக கேட்டோம். அதற்கு VAO திரு.முருகன் அவர்கள் ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.5,000/- வீதம் இரண்டு விண்ணப்பங்களுக்கும் சேர்த்து ரூ.10,000/- லஞ்சமாக கொடுத்து விடுங்கள் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை என்றும் பார்த்து முடித்து விடுங்கள் என்று கூறினேன். அதற்கு VAO திரு.முருகன் அவர்கள் DT மற்றும் மேலே உள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும். ரூ.10,000/- கொடுத்து

விடுங்கள், பட்டா மாறுதல் மனுவை பரிந்துரைத்து அனுப்பிவிடுகிறேன், இல்லையென்றால் ரிஜெக்ட் ஆகிவிடும் என்றார். மேலும், பணத்தை தயார் செய்து விட்டு மாலையில் அலுவலகத்தில் உள்ள கிராம உதவியாளரிடம் கொடுக்கவும், இல்லாவிட்டால் பணத்தை நாளை 05.12.2025 அன்று காலையில் VAO அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறு கூறினார். நாங்களும் சரியென்று கூறிவிட்டு வந்துவிட்டோம். சட்டப்பூர்வ பணியை செய்து தருவதற்காக ரூ.10,000/-ம் லஞ்சமாக கேட்கும் கன்னிவாடிமலை தெற்கு கிராம VAO திரு.முருகன் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இந்த புகாருடன் பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்த விபரங்களை இணைத்துள்ளேன். மேலும் கன்னிவாடி மலை தெற்கு கிராம VAO திரு.முருகன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.Elayaraja, 05.12.2025).

Sir, Received the complaint on 05.12.2025 at 07.30hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.14/2025, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 08.30 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 5.12.2025).

Original FIR along with Computer Typed complaint of Tr.P.Elayaraja, Age.45/2025, S/o.Palanisamy, D.No.14-1-22, Velupillai Street, Ayyampalayam, Authoor Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

05/12/25

(P.Palanisamy),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul